# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C. 118/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.2 |
| Name | : | கவிதா |
| Father’s Name | : | க/பெ.பார்திபன் |
| Village | : | . |
| Taluk | : | . |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | . |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 14.07.2025.

1 முதல் 8 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊர்காரர்கள். சுமார் 3, 4 வருடங்களுக்கு முன்பு தேதி ஞாபகம் இல்லை. மத்திய நேரத்தில் நான், எனது கணவர், பிரபாகரன், எனது மாமியார் ஆகியோர் கழனியில் வேலை செய்துக்கொண்டிருந்தோம்.

அப்போது அமராவதி என்பவரின் தங்கை எங்களை சமாதானத்திற்காக கூப்பிட்டார். எனது கணவர் வரமாட்டேன் என்று சொன்னார். அப்போது அமராவதியின் கணவர் ஒரு அப்பனுக்கு பிறந்திருந்தால் வாடா என்று கூப்பிட்டார். அதனால் என் கணவர் சென்றார். அங்கு பேசிக்கொண்டிருந்தபோது 2ம் எதிரி அமரேசன் எனது கணவரை தாக்கினார். நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகள் அவரை தாக்கினார்கள். அவரால் திருப்பி தாக்க முடியவில்லை. என்னையும் தாக்கினார்கள். எனக்கு காலில் காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிகள் கும்பலாக தாக்கியதால் யார் குறிப்பிட்டு தாக்கினார்கள் என்று சொல்ல முடியாது. பின்பு காவல் நிலையத்தில் இதுசம்மந்தமாக புகார் கொடுத்தோம். இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

மனுவின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.